பத்திரிக்கை செய்தி

முகவர் உரிமம் புதுப்பிக்க லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய சிறு சேமிப்பு உதவி இயக்குனருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

புகார்தாரர் திரு.சரஸ்வதி, துறையூர், திருச்சி மாவட்டம் அவர்கள் தன்னுடைய பெயரில் அஞ்சலக சிறு சேமிப்பு திட்டத்தில் சிறு சேமிப்பு முகவர் உரிமத்தை புதுப்பிக்க திருச்சி மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திருமதி.திலகமணி, உதவி இயக்குநர் மற்றும் நேர்முக உதவியாளர் (சிறு சேமிப்பு), மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகம், திருச்சி மாவட்டம், அவர்கள் தனக்கு ரூ.1,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 02.08.2010 மேற்கொள்ளப்பட்டு திருமதி.திலகமணி, உதவி இயக்குநர் மற்றும் நேர்முக உதவியாளர் (சிறு சேமிப்பு) புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.1,000/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது சிறப்பு நீதிமன்றம், திருச்சி நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் 18.09.2025 திருமதி.திலகமணி, உதவி இயக்குநர் மற்றும் நேர்முக உதவியாளர் (சிறு சேமிப்பு) அவர்களுக்கு 3 ஆண்டுகள் சிறை கடுங்காவல் தண்டணையும் ரூ.10,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.